# 73ஆம் ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

10-11-2026 செவ்வாய் முதல் 16-11-2026 திங்கள் முடிய



விழா நடைபெறும் இடம்:

**ஸ்ரீ ஸத்யாநந்தா யோகா மையம்**

No. 4, T. P. கோயில் 2ஆவது சந்து,
ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- ஆறுமுக லக்ஷார்ச்சனை/த்ரிசதி
- ருத்ர பாராயணம்
- சொற்பொழிவுகள்
- ஸ்ரீ அருணகிரிநாதர் விழா
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- தேவசேனா வள்ளி கல்யாணம்

73ஆவது ஆண்டு
ஷஷ்டிப் பெருவிழா

உன் புகழே பாடி நான் இனி அன்புடன் ஆசார பூஜைசெய்து
உய்ந்திட வீணாள் படா(து) (அ)ருள் புரிவாயே

## முருகன் திருவருட் சங்கம் (Regd)

101 /50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
தொலை பேசி : 044-2854 4713

# 73ஆவது ஆண்டு

# ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா




**10.11.2026 செவ்வாய்க்கிழமை முதல்**
**16.11.2026 திங்கட்கிழமை முடிய**

விழா நடைபெறும் இடம்

**ஸத்யாநந்தா யோகா மையம்**
4, T.P. கோயில் 2ஆவது சந்து
ஐஸ்ஹவுஸ், திருவல்லிக்கேணி
சென்னை 600 005
கைப்பேசி 98417 38069

**முருகன் திருவருட் சங்கம்** (Regd.,)
Society Regn. No. 137/2024
101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005
☎ 044 2854 4713

மாக்கன சித்திர கோபுர(ம்) நீள்படை
வீட்டி(ல்) (இ)ருத்திய நாள்(அ)வன் வேர்(அ)ற
மார்க்க(ம்) முடித்த வி(ல்)லாளிகள் **நாயகன்** **மருகோனே**
**(தாக்கமருக்கொரு - திருத்தணிகைத் திருப்புகழ்)**

உ
முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம் (Regd.,)

Society Regn. No. 137/2024
101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005

ஸ்தாபிதம்: 1954 ☎ 044-2854 4713

## நிகழ்ச்சி நிரல்

ஆனைமுகவற்கு இளைய ஐயனின் திருவருளினால் சங்கத்தின் **73ஆவது ஆண்டு** ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா 10.11.2026 செவ்வாய்க்கிழமை முதல் 16.11.2026 திங்கட்கிழமை முடிய ஏழு தினங்கள் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வண்ணம் திருவல்லிக்கேணி ஸத்யாநந்தா யோகா மையம் ஹாலில் நடைபெற உள்ளது.

அடியார்கள் யாவரும் நமது சங்கத்தின் சார்பில் நடைபெறும் இந்த **73ஆவது ஆண்டு** ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன், தங்களால் இயன்ற அளவு **அரிசி, பருப்பு**, மற்றும் **பொருளுதவிகளை** அளித்து, வள்ளி படர்சாரல் வள்ளிமலை மேவு வள்ளி மணவாளப் பெருமானின் திருவருளினால் வாழ்க்கையில் இஹபர செளபாக்கியத்துடனும், சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வுடனும் வாழப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

மிகவும் பெருமை பொருந்தி, சித்திரங்களோடு கூடிய, கோபுரங்களால் அழகு செய்கின்ற காவலோடு கூடிய, அசோகவனத்தில் (சீதையைச்) சிறைபடுத்திய பொழுது, இராவணனுடைய குலத்தின் வேர் அற்றுப் போகும்படி செய்தவரும் வில்வீரர்களுக்குள் நடு நாயகமாக விளங்குகின்றவருமாகிய ஸ்ரீ இராமபிரானின் திருமருகரே!

அரிய தன் படைக்கர்த்த(ர்) (எ)ன்று
அசுரர் தம்கிளைக்கட்டை வென்ற
**அரிமுகுந்தன்** மெச்சுற்ற பண்பின் மருகோனே
(கருவடைந்து - திருப்பரங்குன்றம் திருப்புகழ்)

---

உ

முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம் (Regd.,)

Society Regn. No. 137/2024

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005

ஸ்தாபிதம்: 1954 ☎ 044-2854 4713

## நிகழ்ச்சி நிரல்

10.11.2026 செவ்வாய்க்கிழமை முதல் 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை முடிய ஆறு தினங்களும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ஸ்ரீவள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளுடன், **ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம், அதோமுகம்** ஆகிய ஆறுமுகங்களுக்குரிய லக்ஷார்ச்சனைகளும், பஜனை வழிபாடும், வேதபாராயணமும், சொற்பொழிவுகளும் திருப்புகழ் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. 14.11.2026 சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் அகண்ட திருப்புகழ் பஜனை வழிபாடும் 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை காலை சூர்ய நமஸ்காரமும், அதனைத் தொடர்ந்து கணபதி ஹோமத்துடன் **"மஹா ஸ்கந்த ஷஷ்டி" ஏகாதச ருத்ர ஜபமும்**, அன்று **குமார போஜனமும்** மற்றும் **அன்னதானமும்** மாலையில் **த்ரிசதி** அர்ச்சனையைத் தொடர்ந்து மலர் வெளியீடும் 16.11.26 திங்கட்கிழமை அன்று காலை "ஸ்ரீ தேவசேனா வள்ளி" கல்யாண வைபவமும் நடைபெற உள்ளன.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

---

அரிய சேனைகளாகவும், சேநாதிபதியாகவும் ஏற்றுக்கொண்டு, இராவண, கும்பகர்ணாதி அசுர குலங்களின் கூட்டத்தை அழித்து வெற்றி பெற்ற, பாவங்களை நீக்குபவரும், முத்தியைக் கொடுப்பவருமாகிய **ஸ்ரீஇராமமூர்த்தி**, மெச்சுவதற்குத் தகுந்த குணங்களை உடைய **மருமகனாக** எழுந்தருளினவரே!

ஓகை தழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்ப(ன்)(அ)ரிகேசன் மருகா எனவே
(ஓ)தமறை ராமேசுர மேவுகுமரா (அ)மரர் பெருமாளே
(வாலவய-இராமேச்வரம் திருப்புகழ்)

---

## 10.11.2026 செவ்வாய்க்கிழமை

காலை 07.30 மணி முதல்
பிற்பகல்12.30 மணி வரை
**ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஈசானமுக (மேல்நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

பிற்பகல் 04.30 மணி முதல்
மாலை 06.00 மணி வரை
**வேத பாராயணம்**

மாலை 06.05 மணி முதல்
இரவு 08.00 மணி வரை
**"ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்"** உபந்யாஸம் வழங்குபவர் ஆங்கரை **ப்ரஹ்மஸ்ரீ ரங்கஸ்வாமி தீக்ஷிதர்**

ᘛᘛᘛᘛᘛ

## 11.11.2026 புதன்கிழமை

காலை 07.30 மணி முதல்
பிற்பகல்12.30 மணி வரை
**ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத்புருஷ முக (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

பிற்பகல் 04.30 மணி முதல்
மாலை 06.00 மணி வரை
**வேத பாராயணம்**

---

உவகையுடன் நெருப்பைக் கக்குகின்ற கணைகளை விட்ட பெருமை தங்கிய வில், சக்கரம், சங்கம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கிய திருக்கரங்களை உடையவரும், இலக்குமிதேவியை மார்பில் தரித்தவரும் ஆகிய **திருமாலின் திருமகரே**! என்று வேதங்கள் புகழ, இராமேச்வரத்தில் எழுந்தருளியுள்ள குமரக் கடவுளே! தேவர்கள் போற்றும் பெருமை மிகுந்தவரே!

ஈ(டு)(அ)ழியும்படி சந்த்ரனு(ம்) சிவ
சூரியனு(ம்) சுரரும் பதம்பெற
ராம சர(ம்)தொடு **புங்கவன்திரு** மருகோனே
(தோழமை-வல்லக்கோட்டைத் திருப்புகழ்)

---

| | |
|---|---|
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **ஸுப்ரஹ்மண்யரும் சாஸ்த்ரங்களும்**<br>உபந்யாஸம் வழங்குபவர்<br>**ப்ரஹ்மஶ்ரீ ராஜகோபால சர்மா** |

ꩲꩲꩲꩲꩲ

## 12.11.2026 வியாழக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல்12.30 மணி வரை | **ஶ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து தக்ஷிண (தெற்கு நோக்குதல்) அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **"ஸுப்ரஹ்மண்ய சுவாமி சரித்திரம்"**<br>உபந்யாஸம் வழங்குபவர்<br>**ப்ரஹ்மஶ்ரீ Dr.L. ஸௌஜன்ய குமார் சாஸ்த்ரிகள்** |

ꩲꩲꩲꩲꩲ

---

வலிமை குன்றி அழியும்படியும், சந்த்ர, சூரியனும், தேவர்களும் தத்தம் பதவிகளைப் பெற்று உய்யுமாறு இராம பாணத்தைத் தொடுத்து விடுத்த **ஶ்ரீஇராமபிரானுடைய திருமருகரே !**

முனைச் சங்(கு) ஒலிடு நீல மகா உததி
அடைத்(து) (அ)ஞ்சாத இராவணன்(நீ)ள் பல
முடிக்கு (அ)ன்று(ஓ)ர் கணை ஏவும் (இ)ராகவன் மருகோனே
(அனிச்சம்-திருச்செந்தூர்த்திருப்புகழ்)

## 13.11.2026 வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல்12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து உத்திர வாமதேவமுக (வடக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **"ஸுப்ரஹ்மண்ய உபாஸனையின் மஹத்வம்"**<br>உபந்யாஸம் வழங்குபவர்<br>**ப்ரஹ்மஸ்ரீ Dr.L. ஸௌஜன்ய குமார் சாஸ்த்ரிகள்** |




போருக்குரிய சங்குகள் ஓவென்று ஒலித்துக் கொண்டிருக்கும் நீல நிறத்தை உடைய பெரிய சமுத்திரத்தில், அணை கட்டி பகைவர்களுக்கு அஞ்சாத இராவணனது மணிமகுடந்தரித்துள்ள தலைகள் அற்றுவிழ, ஒரே கணையை ஏவிய இரகுவீரராகிய **ஸ்ரீஇராமபிரானுடைய மருகனாக** எழுந்தருளியிருப்பவரே !

காம்பேய் பந்(து)(ஆ)ட விக்ரம
வான்றோய்க் கெம்பீர வி(ல்)கணை
காண் தேர் கொண்டு (ஏ)வும் (அ)ச்சுதன் மருகோனே
(மான்போற்-திருச்செந்தூர்த் திருப்புகழ்)

---

## 14.11.2026 சனிக்கிழமை

காலை 07.30 மணி முதல் / பிற்பகல் 12.30 மணி வரை } **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஸத்யோஜாத முக (மேற்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

காலை 07.30 மணி முதல் / பிற்பகல் 2.00 மணி வரை } **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா**
**திருப்புகழ், அநுபூதி, அலங்காரம் மற்றும் வகுப்புகளிலிருந்து சில பாடல்கள்**
நிகழ்த்துபவர்
**முருகன் திருவருட் சங்கத்தினர்**
திருவல்லிக்கேணி, சென்னை 600 005

மாலை 04.30 மணி முதல் / மாலை 06.00 மணி வரை } **வேத பாராயணம்**

மாலை 06.00 மணி முதல் / இரவு 08.00 மணி வரை } **"மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்"**
உபந்யாஸம் வழங்குபவர்
சேக்கிழார் சீர் பரவுவார்
பரம சாம்பவ திருவையாறு
**வே. ரமண சர்மா** அவர்கள்

---

தலைகளைப் பேய்கள் பந்து போல் எறிந்து விளையாடுமாறு வீரமும், வானத்தில் தோயவல்லதான, கெம்பீரமும் உடைய வில்லிலிருந்து பாணத்தை, அழகிய தேரிலிருந்து ஏவிய **ஸ்ரீஇராமபிரானுடைய திருமருகரே !**

உண்டு(ம்)கண்டு(ம்) சிலகூளிகள்
டிண்டிண்டென்று(ம்) குதிபோடவு(ம்)
(உ)யர்ந்த (அ)ம்பும் கொண்டு வெல் **மாதவன் மருகோனே**
**(வஞ்சங்கொண்டு-திருச்செந்தூர்த் திருப்புகழ்)**

---

## 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை
## மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **சூர்ய நமஸ்காரம்** |
| காலை 07.00 மணி | **கணபதிஹோமம்** |
| காலை 08.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை | **ஏகாதச ருத்ர ஜபத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து, அதோமுக (கீழ் நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 09.00 மணி முதல் முற்பகல் 11.30 மணி வரை | **திருப்புகழ், பத்திப் பாடல்கள் இன்னிசை ஸ்ரீமதி கோமதி ஸ்ரீ குழுவினர்** |
| முற்பகல் 11.35 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் வேல் மாறல் பாராயணம் முருகன் திருவருட் சங்கத்தினர்** |
| பிற்பகல் 01.30 மணி | **ஆறுமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை பூர்த்தி தொடர்ந்து குமாரபோஜனம் அன்னதானம்** |
| மாலை 04.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை | **வேதபாராயணம்** |
| மாலை 05.20 மணி முதல் இரவு 06.45 மணி வரை | **முருகப்பெருமானுக்கு ஆறுவித மலர்களைக் கொண்டு ஸ்ரீஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை** |

---

மாமிசம், மூளை இவைகளை சில பேய்கள் தின்றும் பார்த்தும், டிண்டிண் என்று கூத்தாட, உயர்ந்த அம்புகளை விடுத்துக் கொன்ற **ஸ்ரீஇராமபிரானுடைய திருமருகரே!**

வீரத்தால் வல ராவணனார் முடி
போகத் தா(ன்)(ஒ)ரு வாளியை(ஏ)விய
மேகத்தே நிக(ர்)(ஆ)கிய **மேனியன்** **மருகோனே!**
**(ஆரத்தோடணி-புலியூர் திருப்புகழ்)**

---

| | |
|---|---|
| இரவு 07.00 மணி முதல்<br>இரவு 08.35 மணி வரை | **ஷஷ்டி விழா மலர் வெளியீடு**<br>**"திருப்புகழில் இராமாயணம்"** |
| இறை வணக்கம் | **திருப்புகழ் இசைவாணர்**<br>**ஸ்ரீ V. லக்ஷ்மிநாராயணன்** A.M.I.E., M.S., |
| வரவேற்புரை &<br>துவக்க உரை | **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யன் நாகநாதன்** |
| விழாவிற்கு தலைமை ஏற்று உரையாற்றி மலரினை வெளியிட்டு வழங்குபவர் | **ப்ரஹ்மஸ்ரீ Dr.L. ஸௌஜன்ய குமார் சாஸ்த்ரிகள்** |
| சிறப்பு விருந்தினர் | **ஸ்ரீ R.S. இராஜகோபாலன்**<br>Global Head - Overseas Indian Business - HSBC Bank (Retd.,) |
| மலரினைப் பெறுநர்கள் | **ஸ்ரீ R.S. வைத்தியநாதன்**<br>Executive Director-Pondy Oxides and Chemicals Ltd |
| | **திருப்புகழ் இசைவாணர்**<br>**ஸ்ரீ V. லக்ஷ்மிநாராயணன்** A.M.I.E., M.S., |
| | **ஸ்ரீ N. அனந்தகிருஷ்ணன்**<br>போஷகர், முருகன் திருவருட் சங்கம் |
| | **ஸ்ரீ V. வேங்கடராமன்**<br>Internal Auditor - Sundaram Clayton Ltd., (Retd.,) |
| நன்றியுரை | **ஸ்ரீ N. சந்த்ரசேகர்**<br>செயலர், முருகன் திருவருட் சங்கம்<br>Director - Creative Desk |

---

வீரத்தில் வல்ல இராவணனுடைய தலைகள் அற்றுவிழ ஒரே கணையைச் செலுத்திய நீலமேகம் போன்ற திருமேனியை உடைய **திருமாலின் மருகரே!**

வணங்கச் சித்தம் (இ)லாத இராவணன்
சிரம் பத்துக்கெட வாளிக டாவியெ
மலங்கப் பொக்கரை ஈ(டு)(அ)ழி **மாதவன் மருகோனே**
**(இணங்கி-புலியூர்த் திருப்புகழ்)**

## 16.11.2026 திங்கட்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 02.00 மணி வரை | **ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**<br>**கீத காங்கேய காவ்யம் என்னும்**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அஷ்டபதி**<br>**சிலவற்றுடன் திருப்புகழில்**<br>**ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**<br>நிகழ்த்துபவர்கள்<br>**ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர்**<br>மற்றும் **முருகன் திருவருட் சங்கத்தினர்** |
| பிற்பகல் 04.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | **விழா நிறைவு இசை**<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்**<br>**101/50, பெரிய தெரு,**<br>**திருவல்லிக்கேணி, சென்னை 600 005** |




வணங்குவதற்கு மனம் இல்லாத, இராவணனுடைய பத்துத் தலைகளும் அற்றுவிழ, அம்பைச் செலுத்தி, மனம் கலங்கப் பொய்யை உடைய அசுரர்களின் வலிமையை அழித்த **திருமாலின் மருகரே !**

கறுக்கு(ம்) தூய மிடற்ற(ன்) அரு(ம்) சிலை
எடுக்கு(ம்) தோளன் (நி)றத்து (அ)மர்(எ)ண் கரி
கடக்குந்தான வனைக் கொ(ல்) (அ)ரும்புயன் மருகோனே
(நிறுக்குஞ்-திருச்செந்தூர்த் திருப்புகழ்)

## தலைவர்

**ஸ்ரீ கணேசன் V.** அபிராமபுரம், சென்னை 600 018

## உபதலைவர்

**ஸ்ரீ வேங்கடராமன் V.** அரும்பாக்கம், சென்னை 600 106

## செயலர்

**ஸ்ரீ சந்த்ரசேகர் N.** மடிப்பாக்கம், சென்னை 600 091

## இணைச்செயலர்கள்

**ஸ்ரீ ஸ்ரீதர் S.** மயிலை, சென்னை 600 004

**ஸ்ரீ ஜானகிராமன் V.** நுங்கம்பாக்கம், சென்னை 600 034

## பொருளாளர்

**ஸ்ரீ நாராயணன் V.P.** மயிலை, சென்னை 600 004

## செயற்குழு உறுப்பினர்கள்

**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யன் S.** தி.நகர், சென்னை 600 017

**ஸ்ரீ கணேஷ்ராமன் M.** வடபழநி, சென்னை 600 026

**ஸ்ரீ ஸ்ரீதரன் S.** மந்தைவெளி, சென்னை 600 028

**ஸ்ரீ மோகன் S.** ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018

கரிய நிறம் பொருந்திய தூய்மை மிக்க கழுத்தையுடைய சிவபெருமானுடைய, அருமையான திருக்கயிலாய மலையை, எடுத்த வலிமையுடைய தோள்களை உடையவனும், மார்பில் கொம்புகளால் குத்திய எட்டுத் திசைகளின் யானைகளை வென்றவனும் ஆகிய இராவணனைக் கொன்ற அரிய நீலமேகவண்ணராகிய **திருமாலின் திருமருகரே !**

## வெண்பா

**முருகன் திருவருட் சங்கத்தில்** நெஞ்சம்
உருகிப் புகுவார் தமக்குப் - பெருகுமே
**அன்றே பெரும் பொருளும்** ஆண்டவன் **பேரருளும்**
நன்றே நலம் பலவும் காண்.

**- அருட்கவிமணி காமாக்ஷிதாசர்**
ஸ்தாபகர்
**முருகன் திருவருட் சங்கம்**




**முருகன் திருவார் அருட்சங்கம்**
மூன்று தமிழ்போல் வாழி! என்றும்
பெருகன் புடையார் பலர் அதனைப்
பேணி வளர்ப்பர் உறுப்பினராய்;
மருகன் மாற்கும் திருமாற்கும்
வாழ்த்த வாழ்வார் வாழவைப்போர்;
பொருகந் தஷஷ்டிப் பெருவிழாவும்
பொலிக! வாழ்க! வளர்க நன்றே

- அருட்கவி தவத்திரு **ஸாதுராம் ஸ்வாமிகள்**

---

**வாழ்க முருகன் திருவருட் சங்கம்**
**(73 ஆண்டுகளாக இறைவன் தொண்டில்)**

உருகும் (அ)டியவர் (இ)ருவினை (இ)ருள் பொரும்
(உ)தய தினகர இமகரன் வலம் வரும்
உலக முழு(து) (ஒ)ரு நொடியினில் வலம் வரு பெருமாளே



உள்ளம் உருகும் அடியார்களுடைய நல்வினை, தீவினைகளாகிய இருவினைகளையும் நீக்குகின்ற இளஞ் சூரியரே! பனியை நீக்கும் கதிரவன் வலம் வருகின்ற உலகம் முழுவதும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வருகின்ற பெருமையில் சிறந்தவரே!